


**11.09.2024**

**தலைப்புச் செய்திகள்**

1. செமி கண்டெக்டர் துறையின் ஆற்றல் மையமாக நம் நாடு உருவெடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் மீன்வளத்துறை சிறப்பான வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய மீன்வளம் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்திருக்கிறார்.

3. தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள ஃபோர்டு நிறுவனம் மற்றும் I.T. Serve கூட்டமைப்பிற்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

4. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 103ஆவது நினைவு தினத்தை ஒட்டி தமிழ் ஆர்வலர்கள் இன்று அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

5. செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் ஹங்கேரி புடாபெஸ்டில் இன்று மாலை தொடங்குகின்றன.

**இனி விரிவான செய்திகள்**

************

**பிரதமர் செமிகான்**

செமி கண்டெக்டர் துறையின் ஆற்றல் மையமாக நம் நாடு உருவெடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முனைப்புடன் மேற்கொள்ளப்படுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

நொய்டாவில் செமிகான் இந்தியா 2024 மாநாட்டை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், சிப் எனப்படும் நுண் தகடுகளை உருவாக்க இந்தியா தனி கவனம் செலுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

மின்னணுவியல் மற்றும் செமி கண்டெக்டர் தொழிற்சாலைகளுக்கு உத்வேகம் அளிப்பதற்கான முயற்சிகளை எடுத்துரைத்த பிரதமர், அடுத்த 10 ஆண்டுகளில் 500 பில்லியன் டாலர் மின்னணு மையமாக நம் நாட்டை மேம்படுத்துவதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இதன்மூலம் 60 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் இந்தியாவின் வெற்றி பல்வேறு ஆக்கப்பூர்வமான தாக்கங்களை நம் நாட்டில் ஏற்படுத்தியுள்ளதாக கூறிய பிரதமர், கைபேசிகளை இறக்குமதி செய்யும் நாடாக இருந்த இந்தியா, தற்போது 2ஆவது பெரிய கைபேசி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நாடாக வளர்ச்சி கண்டுள்ளது என்று பெருமிதம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் செமி கண்டெக்டர் தொழிற்சாலைகளின் வளர்ச்சி இதுதொடர்பான தொலைநோக்கு பார்வையை மேலும் வலுப்படுத்தும் என்றார்.

************

**பிரதமர் - பசுமை ஹைட்ரஜன்**

முன்னதாக 2ஆவது சர்வதேச பசுமை ஹைட்ரஜன் மாநாட்டில் காணொலி மூலம் உரையாற்றிய பிரதமர், பசுமை ஹைட்ரஜன் மற்றும் கரியமில வாயு குறைத்தல் நடவடிக்கைகளில் சர்வதேச ஒத்துழைப்பின் அவசியத்தை வலியுறுத்தினார்.

சுத்திகரிப்பு, உரம், எஃகு, கனரக போக்குவரத்து துறைகள் பசுமை ஹைட்ரஜன் திட்டத்தால் பெரிதும் பயன்பெறும் என்று அவர் எடுத்துரைத்தார்.

தூய்மையான, பசுமையான புவியை உருவாக்குவதில் இந்தியா அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதாக எடுத்துரைத்த பிரதமர், பசுமை எரிசக்தி தொடர்பான, பாரீஸ் உடன்படிக்கையை பூர்த்தி செய்த ஜி-20 நாடுகளில் இந்தியா முதன்மையாக திகழ்கிறது என்றார்.

2030-ம் ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட காலநிலை மாற்ற சவால்களுக்கான இலக்குகளை 9 ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியா எட்டியதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

************

**ராஜீவ் ரஞ்சன் சிங்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் நாட்டின் மீன்வளத்துறை சிறப்பான வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய மீன்வளம் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்திருக்கிறார்.

புதுதில்லியில் பிரதமரின் மீன்வளத்துறை மேம்பாட்டு திட்டங்களை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர் இத்துறையில் உற்பத்தி, செயலாக்கம் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகளை அவர் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக 721 கோடி ரூபாய் மதிப்பிலான 5 தேசிய மீன்வள திட்டங்களை அமைச்சர் இன்று தொடங்கிவைத்தார்.

மீன்வளத்துறையில் ட்ரோன் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது குறித்த ஆராய்ச்சி திட்டங்களும் இதில் அடங்கும்

************

**கிரண் ரிஜிஜு**

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசின் 100 நாள் சாதனைகளின் ஒருபகுதியாக 6 திட்டங்களின் இணையதளங்களை நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜு புதுதில்லியில் இன்று தொடங்கிவைத்தார்.

இதன்படி தேசிய மின்னணு நாடாளுமன்ற நடவடிக்கை,

தேசிய இளையோர் நாடாளுமன்ற திட்டம்,

ஆலோசனைக்குழு மேலாண்மை,

துணை சட்ட மேலாண்மை முறைகள்,

ஏகலைவா மாதிரி உண்டு உறைவிட பள்ளிகள் போன்றவற்றின் இரண்டாம் கட்ட செயல்பாடுகளை அமைச்சர் தொடங்கிவைத்தார்.

இத்திட்டங்கள் சிறப்பான ஆளுமைக்கு வழிகோலும் என்று நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

************

**சிவில் விமானம்**

2ஆவது ஆசிய பசி∴பிக் சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர்கள் மாநாட்டை மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு.ராம்மோகன் நாயுடு இன்று துவக்கிவைக்கிறார்.

இந்த இரண்டு நாள் மாநாட்டின் ஒருபகுதியாக ஜப்பான் மாலத்தீவு சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் விமான போக்குவரத்து துறை அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் இடம்பெற உள்ளன.

************

**கஜேந்திரசிங் ஷெகாவத்**

மகாத்மா காந்தியடிகளின் பல்வேறு வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வுகளை எடுத்துரைக்கும் சிற்பகங்கள் மற்றும் புகைப்படங்களை உள்ளடக்கிய சிறப்பு ரயில் பெட்டியை புதுதில்லி ராஜகாட்டில் மத்திய கலாச்சாரம் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், தற்போதுள்ள அரசியல் புவி சூழலில் மத்தியில் காந்தியடிகளின் அகிம்சை கொள்கை இன்றும் உலகம் முழுவதும் பல்வேறு தரப்பினருக்கு உத்வேகமாக திகழ்கிறது என்று அவர் எடுத்துரைத்தார்.

காந்தியடிகள் காலத்தில் பயன்பாட்டில் இருந்த இந்த ரயில்பெட்டியில், அவரது பயணங்கள், சக பயணிகளுடன் அவர் மேற்கொண்ட கலந்துரையாடல்கள் உள்ளிட்டவற்றை சித்தரிக்கும் வகையிலான சிற்பங்கள் காட்சியமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

************

**நைட்டிங்கேல் விருது**

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு செவிலியர்களுக்கான ஃபிலாரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகளை புதுதில்லியில் இன்று வழங்கினார்.

சமூகத்திற்கு சிறப்பாக சேவையாற்றும் செவிலியர்களின் அளப்பரிய பணிக்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில், மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சகத்தின் சார்பில் 1973-ஆம் ஆண்டு முதல் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது.

************

**முதலமைச்சர்**

தமிழகத்தில் உள்ள திறன்மிகு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திட முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தகவல் தொழில்நுட்ப கூட்டமைப்பின் தேசிய தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்கா சிகாகோ நகரில் இக்கூட்டமைப்பின் தலைவர்களை இன்று சந்தித்து பேசிய அவர் தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ளவும் அழைப்பு விடுத்தார்.

முன்னதாக ஃபோர்டு நிறுவனத்தின் உயர் அலுவலர்களை சந்தித்து மாநிலத்தில் புதிய முதலீடுகளை மேற்கொள்வது குறித்து முதலமைச்சர் ஆலோசானை மேற்கொண்டார்.

************

**கனவு ஆசிரியர்**

தமிழக அரசின் கனவு ஆசிரியர் திட்டத்தின் மூலம் மாநிலத்திலிருந்து 55 ஆசிரியர்கள் டென்மார்க் மற்றும் ஸ்வீடன் நாடுகளுக்கு அரசின் செலவில் இம்மாத இறுதியில் அழைத்து செல்லப்பட உள்ளனர்.

தொழில்சார் அறிவு மற்றும் திறன்மேம்பாட்டின் அடிப்படையில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளை சேர்ந்த 380 ஆசிரியர்கள் இதற்கென தேர்வு செய்யப்பட்ட நிலையில் முதல் 55 இடங்களை பெற்ற ஆசிரியர்கள் வெளிநாடுகளுக்கு அழைத்து செல்வதற்கான ஏற்பாடுகளை கல்வித்துறை மேற்கொண்டுள்ளது.

************

**ஒழுங்காற்று குழு கூட்டம்**

காவிரி நீர் ஒழுங்காற்று குழு கூட்டம் நாளை புதுதில்லியில் நடைபெறுகிறது.

காவிரி ஆற்றிலிருந்து தமிழகத்திற்கு கர்நாடகம் அக்டோபர் மாதத்திற்கான 20 டி.எம்.சி தண்ணீரை விடுவிக்க இக்கூட்டத்தில் தமிழக அரசு வலியுறுத்தும் என தெரிகிறது.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நீர்வள உயர் அதிகாரிகள் இதில் பங்கேற்க உள்ளனர்.

************

பாரதியார் நினைவு தினம்

மகாகவி பாரதியாரின் 103ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளை ஒட்டி சென்னை காமராஜர் சாலையில் உள்ள பாரதியாரின் திருவுருவ சிலைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள திருவுருவ படத்திற்கு மாநில அமைச்சர்கள் திரு.சாமிநாதன், திரு.சேகர்பாபு உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

பாரதியாரின் சொந்த ஊரான தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் அவரது இல்லத்தில் அமைந்துள்ள திருவுருவ சிலைக்கு தமிழ் அறிஞர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நெல்லையில் பாரதியார் பயின்ற பள்ளியில் அவரது திருவுருவ சிலைக்கு மாணாக்கர் மலர்தூவி மரியாதை செலுத்தியதுடன் அவரது பாடல்களை பாடி இசை அஞ்சலி செலுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகே மேல நாகையில் அமைந்துள்ள அன்னாரது நினைவு மண்டபத்தில் அன்னாரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

சேலம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் பாரதியாரின் படைப்புகள் குறித்த சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

************

ரயில்

மயிலாடுதுறை ரயில் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால்:

மன்னார்குடி - மயிலாடுதுறை பயணியர் ரயில்

திருவாரூர் - மயிலாடுதுறை பயணியர் ரயில் இன்றுமுதல் வரும் 15ஆம் தேதிவரை ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

************

இருவரி

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஜவுளி பூங்கா அமைக்க தொழில் முனைவோர்களுடன் வரும் 20ஆம் தேதி ஆலோசனைக்கூட்டம் நடைபெற இருப்பதாக ஆட்சித்தலைவர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் பொதுவிநியோக திட்ட குறைதீர்க்கும் முகாம் எலம்பலூர், தேவையூர், முருக்கன்குடி, கூடலூர் ஆகிய கிராமங்களில் வரும் சனிக்கிழமை நடைபெறுகிறது.

ஈரோடு, திருச்சி மாவட்டங்களில் எயிட்ஸ் தடுப்பு விழிப்புணர்வு பேரணி மற்றும் மாரத்தான் போட்டிகள் இன்று நடைபெற்றன. ஏராளமான மாணாக்கர் இதில் பங்கேற்றனர்.

************

**நாகை  வாய்ஸ்**

நாகை கோடியக்கரைக்கு தென்கிழக்கே மீன்பிடித்துக்கொண்டிருந்த செருதூர் கிராம மீனவர்களின் படகின் மீது  இலங்கை கடற்படை கப்பல் மோதிய விபத்தில் 4 மீனவர்கள் காயமடைந்தனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

************

**கோவில்**

மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோவில் ஆவணி மூலதிருவிழாவில் சுந்தரேஸ்வரர் பட்டாபிஷேகம் இன்றுமாலை நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

************

**ஒலிம்பியாட்**

45ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் ஹங்கேரி புடாபெஸ்டில் இன்று மாலை தொடங்குகின்றன.

12 நாட்கள் நடைபெறும் இப்போட்டிகளில் உலகெங்கிலும் உள்ள ஆயிரத்து 800 வீர வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இந்தியா சார்பில் குகேஷ், பிரக்யானந்தா, ஹரிகிருஷ்ணா, ஹரிகா, வைஷாலி உள்ளிட்டோர் களமிறங்குகின்றனர்.

************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

************